உ

சிவமயம்.

மாமிசபோசனஞ்செய்வோருக்கு

இராமபாணம்,

இதனையறிந்து

மரணபரியந்தம் விட்டவர்களுக்குத்

தேவாமிர்தம்,

பூரணவயசோடும் வாழ்தற்குரிய

நோயணுகாவிதி.

இவை

ஊர்காவற்றுறையில் இரோதுத்துரையாக இருந்து காலஞ்சென்ற

வண்ணார்பண்ணை

ஆ. சுப்பிரமணியபிள்ளை அவர்கள்

செய்தது

யாழ்ப்பாணம் கொக்குவில்

ச. இ. சிவராமலிங்கையரால்

சோதிடப்பிரகாசயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டன.

ஆறாம் பதிப்பு.

துர்மதி௵ மார்கழி௴.

☞ இது, பிறங்கு நாட்டுக்கோட்டை நகர வைசிய வாலிபர்களால்

தைப்பூசத்தின்கண் பரவச்செய்தது

உ

சிவமயம்.

மாமிசபோசனம்.

பிராணிகளைக் கொல்லாமையே புண்ணியங்களெல்லாவற்றுள்ளும் மேலான பெரும்புண்ணியம் என்றும், பிராணிகளைக் கொல்லுதலே பாவங்களெல்லாவற்றுள்ளும் மிகக் கொடிய பெரும்பாவம் என்றும் சைவசாத்திரங்களெல்லாம் முழங்குகின்றன. இவைகளைச் சிறிதும் நோக்காமல் எத்தனையோ பலர் தம்முடம்பு பூரித்தலொன்றே பயனாக ஆடு, பன்றி, கோழி முதலிய பிராணிகளை அலற அலறக் கொலைசெய்து அவற்றின் மாமிசங்களைப் புசிக்கின்றார்கள். இவர்களுக்கு எங்கேயாயினும் சுகமில்லை. இம்மையிலுந் துன்பம்! மறுமையிலும் நரகம்!

வள்ளலார்.

ஆடுபன்றி கோழி யருந்துவோர் கட்கெல்லாம்
வீடில்லை யென்றுரைக்கும் வேதங்கள்—நாடுமவர்க்
கிம்மையிலுந் துன்பம் மறுமையிலு மேழ்நிரயம்
நன்மையிலை யோரிடத்து நாடு.

இவர்களெல்லாம் உண்டுசீவித்தற்கு வேறே உணவுகளில்லையா? தாவரவுணவுகளெல்லாம் எங்கேபோயின! தாவரவுணவுகளை உண்டால் இறந்துபோவாரோ! தாவரவுணவுகளை உண்போர் நன்கு சீவிக்கவில்லையா! கொலைசெய்து மாமிசமுண்டு நரகவேதனைக்குத் தம்மையாளாக்குவது நல்லதோ! இவர்கள் அறிவிருந்தவாறென்னை! இவர்களும் அறிவுடையவர்களா? அறிவுடையவர்களாயின், கொன்றுதின்று நரகவேதனையைத் தம்முயிருக்குத் தாமேதேடிக்கொள்ளுவாரா? பெறுதற்கரிய மானுடப்பிறவியைப் பெற்றது புலாலுண்டு நரகத்திற் போதற்குத்தானோ?

ஆடு, பன்றி, கோழி முதலிய பிராணிகளைக் கொல்லும்போது அவைகள் அனுபவிக்கும் வேதனைக்கு அளவுமுண்டா? வேதனை பொறுக்கமாட்டாமல் அம்மா! அம்மா! என்று அலறுகின்றன வல்லவா? அம்மா என்ற சத்தத்தைக் கேட்டுக்கொண்டு சும்மா

சென்றவர்க்கும் நரகமாமே! அரஹர! சிவ! சிவ! பரிதாபம்! பரிதாபம்!! கொன்றுதின்றூர் செல்லும் நரகங் கூறவும் வேண்டுமோ?

வள்ளலார்.

அம்மா வெனவலற வாருயிரைக் கொன்றருந்தி
இம்மா நுடரெல்லா மின்புற் றிருக்கின்றூர்
அம்மா வெனுஞ்சத்தங் கேட்டகன்ற மாதவர்க்கும்
பொய்ம்மா நிரையமென்றூற் புசித்தவர்க்கென் சொல்லுவதே.

கலையெலா முணர்ந்தா னேனுங் கரிசறத் தெளிந்தா னேனும்
மலையென வுயர்ந்தா னேனு மனமய லகன்றா னேனும்
உலகெலாம் புகழப் பல்லோர்க் குதவிய கைய னேனும்
இலகிய விரக்க மின்றே லெழுநர கடைவ னன்றே.

வள்ளுவர்.

அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று.

தாயுமானவர்.

கொல்லா விரதங் குவலயமெல் லாமோங்க
எல்லார்க்குஞ் சொல்லுவதெ னிச்சை பராபரமே.
கொல்லாவிரத மொன்றே கொண்டவர்கள் நல்லோர்மற்
றல்லாதார் யாரோ அறியேன் பராபரமே.

புலாலுண்போர் பாவிகள் என்றும், நீசர் என்றும் நல்லோராலே இகழப்படுவார். அவர்களுக்குச் சாதியுமில்லை! நீதியுமில்லை! எக்குலத்தாராயினும் என்ன! பறையருடைய மலத்தை உண்ணும் பன்றி கோழிகளை உண்பார்க்குக் குலமுமுண்டா? அவரைப் புலையரென்றே நூல்களெல்லாம் எடுத்துக் கூறுகின்றன. புலையன்வீட்டிலுண்பவர் புலையராதல்போலக் கொலைஞராகிய அவர்வீட்டிலுண்பவரும் கொலைஞராவர்!

வள்ளலார்.

ஆருயிர் கொலாத மேலோ ரறிவினை யறிந்த நல்லோர்
நீமண மொடுக்க வல்லோ ரிவர்களே தேவராவர்
காமராய்க் கற்ப ழிப்போர் களவுசெய் துடல் வளர்ப்போர்
மாமிசந் தின்போ ரெல்லாம் மானுடப் புலைய ராவர்.

தனிப்பாட்டு.

பறையரைப் பறையரென்று பறைந்திடு மனிதர் கேளீர்
பறையர்தம் மலத்தைத் தின்னும் பன்றியைப் புசிப்ப தென்னே
மறையதே யாகு மந்தக் கறிதனைக் கலத்தி விட்டு
மறையவே வைத்துத் தின்னு மனிதரே பறையர் கண்டீர்.

வள்ளலார்.

கொலையிலா ருதவு மன்னங் குறிக்கிற்பே ரமுத மாகும்
கொலையுளோ ருதவு மன்னங் குறிக்கிற்பேர் விடம தாகும்
புலையர்தம் மனையி லுண்போன் புலையரு மாறு போலக்
கொலைஞர்தம் மனையி லுண்போன் கொலைஞனே யாவ னன்றே.

மாமிசம்புசிப்போர் ஞானம்பெறினுமென்! தவஞ்செய்யினுமென்! தானஞ்செய்யினுமென்! தீர்த்தமாடினுமென்! கடவுளை வழிபடினுமென்! செல்வம்பெறினுமென்! யாது செயினுமென்! நற்கதி பெறுதல் அரிது! அரிது!!

சிவஞானதீபம்.

கொலையாதி நெறியகன்ற ஞானந் தானே
கூறரிய மேலான ஞான மாகும்
கொலையாதி யகன்றொழுகுந் தவங்க டாமே
குற்றமிலா நற்றவமென் றுரைக்கு நூல்கள்
கொலையாதி யகற்றியநல் லறங்க டாமே
குவலயத்தி லொப்பற்ற வறங்க ளாகும்
கொலையாதி யகன்றுபெறுஞ் செல்வந் தானே
கூறிலுயிர்க் கிதமான வாழ்வு தானே.

வள்ளலார்.

கங்கையிற் படிந்திட் டாலுங் கடவுளைப் பூசித் தாலும்
மங்குல்போற் கோடி தானம் வள்ளலாய் வழங்கி னாலும்
சங்கையில் லாத ஞான தத்துவ முணர்ந்திட் டாலும்
பொங்குறு புலால்பு சிப்போன் போய்நர கடைவ னன்றே.

திருமந்திரம்.

கானுறு கோடி கடிமலர் வில்வம்
வானுற விட்டு வாழ்த்தி வணங்கினும்
ஊனினை நீக்கி யுண்பவர்க் கல்லது
தேனமர் பூங்கழல் சேரவொண் ணாதே.

புலாலுண்போரைப் பார்த்தாலும் பாவம்! தீண்டினாலும் பாவம்! இரக்கமின்மையாலே அவர்களை இராக்ஷதரென்று வேதங்கள் எடுத்துச் சொல்லுகின்றன. அவர்களுக்கு மலையளவான பெரும்பொருளைக் கொடுத்தாலும் ஒரு சிறிய குன்றுமணியளவினதாய்க் குறைந்துபோகும்.

வள்ளலார்.

கொல்லா விரத குலமே குலமென்று
நல்லோர்க ளெல்லாம் நவின்றிருக்க—கொல்லாற்

றெரிசித்தா லும்பாவந் தீயன்முக நோக்கிப்
பரிசித்தா லும்பாவம் பார்.

இரக்கமிலா தாரரக்க ரென்றுமறை யாதி
உரைக்க வுரவோரு மோம்ப—இரக்கமின்றிக்
கொல்வார்க்குக் குன்றனைய செய்தாலுங் குன்றியாங்
கொல்லார்க்குக் குன்றியுங் குன்று.

நாம் கொலைசெய்திலேம். யாரோ கொலைசெய்து கொண்டு வந்து விற்ற மாமிசத்தை விலைக்கு வாங்கி உண்கின்றேம். எமக் கெப்படிப் பாவம் வருமென்று சிலர் சொல்லுகின்றனர். நன்று! நன்று!! இவரெல்லாம் விலைக்கு வாங்காராயின், அவரெல்லாம் கொலைசெய்து கொண்டுவருவாரோ? கொன்றவருக்குமாத்திரந் தான் நரகமோ? கொன்றவன் குறைத்தவன் முதலிய எல்லார்க்கும் நரகமென்று நூல்களெல்லாம் முழங்குகின்றன.

வள்ளுவர்.

தினற் பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலைப் பொருட்டா லூன்றருவா ரில்.

வேறு.
கொன்றவன் குறைத்தவன் கொணர்ந்து விற்றவன்
ஒன்றிய பொருள்கொடுத் துவந்து கொண்டவன்
நன்றடு மடைமகன் காயிற் பெய்தவன்
என்றிவ ரறுவரும் நரகி லெய்துவார்.

வேறு.
கூறு போட்டவன் கொன்றவன் தின்றவன்
கூடநின்றவன் சொன்னவன் கேட்டவன்
ஆறுபேர்க்கு மருநர கேகதி
ஆழி போற்கிணை ருழமுண் டாக்கியே
சீறு பூச்சிசெய் யான்மர வட்டைகள்
தேளு நட்டுவக் காலிசெம் பாம்புகள்
வீறு பூச்சிகள் வேணதெல் லாம்விழ
வீழ வீழ்த்துவர் வேலர்தம் மாணையே.

இந்தக் கொலைப்பாவிகள் அனுபவிக்கும் நரகவேதனையை யாதென்று சொல்லுவோம்! இயமதூதுவர்கள் இவர்களைச் சும்மா விடுவார்களா? பாம்பு, தேள், நட்டுவக்காலி முதலிய விஷசெந்துக்கள் நிறைந்த ஆழ்ந்த நீர்க்கிணற்றிலே வீழ்த்துவார்கள்! அது மட்டோ? இரும்பினை உருக்கிச் சுடச்சுட அவர்கள் வாயிலே வார்ப்பார்கள்! இன்னும் பலபல வேதனைகளுஞ் செய்வார்கள்! அந்த வேதனைகளையெல்லாஞ் சகித்துக்கொள்ளுதல் எவராற்கூடும்?

அந்தோ! நினைத்தவர் நெஞ்சந்தானும் நடுநடுங்காதோ? சிவ! சிவ! பரிதாபம்! பரிதாபம்!!

திருமந்திரம்.

கொல்லிடு குத்தென்று கூறிடு மாக்களை
வல்லிடி காரர் வலிக்கயிற் றாற்கட்டிச்
செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை
நில்லிடு வென்று நிறுத்திவைப் பாரே.

பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாருங் காண வியமன்றன் றூதுவர்
நல்லோர்கள் செல்லா நரகத் திடைகொண்டு
மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே.

சிவஞானதீபம்.

எவ்வுயிரும்பராபரன்சந்நிதியதாகும் இலங்குமுயிருடலனைத்துமீசன் கோவில், எவ்வுயிரும் எம்முயிர்போலென்றுநோக்கி இரங்காதுகொன்றருந்துமிழிவினோரை, வல்லியமதூதருந் தண்டஞ்செய்து வல்லிரும்பையுருக்கியவர்வாயில்வார்த்து, வெவ்வியதீயெழுநரகில்வீழ்த்திமாறு வேதனைசெய்திடுவரெனவோதுநூலே.

திரிகடுகம்.

ஊனுண் டுயிர்கட் கருளுடையே னென்போனும்
தானுடன் பாடின்றி வினையாக்கு மென்பானும்
காமுறு வேள்வியிற் கொல்வோனு மிம்மூவர்
தாமறிவர் தாங்கண்ட நூல்.

கந்தரலங்காரம்.

மன்னுயிர் யாவையுந் தன்னுயிர்போற் செயும் மாதவம் போற்
பின்னொரு மாதவமில்லை.

இன்னும் எத்தனையோ மகான்கள்வாக்கினாலே மாமிசபோசனம் பெருங் கொடும்பாவமென்று விலக்கப்பட்டிருக்கின்றது. மாமிசம்புசிப்போர் இங்கே நாம் எடுத்துக்காட்டிய பெரியோர் வாக்குகளைப் பொய்யாமொழி எனக்கொண்டு இனியாவது மாமிசம் புசித்தலை விட்டுவிடக்கடவர். மாமிசம்புசித்தலைப் பாவமென்றுணர்ந்து மரணபரியந்தம் விடுவோர், விட்டநாள்தொடங்கி இறக்கும்நாள்வரைக்கும் எண்ணி இடையுள்ள நாள்கள் எவ்வளவோ அவ்வளவு அசுவமேதயாகங்கள் செய்த பயனை அடைவார்கள் என்று, சூதமுனிவர் நைமிசாரணியமுனிவர்களுக்கு உபதேசித்தார் என்று வடமொழிச் சேதுபுராணங் கூறுகின்றது.

இற்றைக்கு முப்பதுவருடங்களுக்கு முன்னே ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர், சங்கரபண்டிதர் முதலிய வித்துவான்கள் கொலைமறுத்தல் முதலிய புத்தகங்கள்கொண்டும், பிரசங்கம்முதலியவைகொண்டும் மாமிசபோசனம் பெருங்கொடும்பாவமென்று வெளிப்படுத்தினார்கள். அவர்கள் வெளிப்படுத்திய புத்தகங்களை இப்போது அநேகர் பார்த்தறியாதவராயிருக்கின்றனர். யாவரும் இங்கேசொல்லப்பட்டவைகளை நன்றாகவாசித்துப் புலாலுண்ணலை முற்றும்விலக்கி நற்கதிபெறுதற்கு முயலுக.

சம்பாஷணை.

மாமிசம்புசித்தலைப்பற்றி எனக்குங் கிறிஸ்தவர் ஒருவருக்கும் நிகழ்ந்த சம்பாஷணை.

இற்றைக்கு இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னே, ஊர்காவற்றுறை இரேகிலே நான் உத்தியோகமாய் இருக்கும்போது, ஸ்ரீமான் கு. கதிரைவேற்பிள்ளையும் அங்கே நீதிபதியாயிருந்தார். ஒருநாள் அவர்வீட்டிலே கிறிஸ்தவர் ஒருவர் வந்து அவரோடு பேசிக்கொண்டிருக்கும்போது நானும் அங்கேபோய்ப் பேசிக்கொண்டிருந்தேன். கிறிஸ்தவர் ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர்மேலே சில குற்றஞ் சொல்லத்தொடங்கினார்.

(நான்.) உடனே அவரைக் கண்டித்துப் பேசினேன். நீரோ கிறிஸ்துசமயி. நீர் தெய்வமென்று கைக்கொள்ளுங் கடவுளுடைய கட்டளையை அவமதித்துக்கடந்து உயிர்க்கொலைசெய்து மாமிசங்களைப் புசிக்கின்றீர். நுங் கடவுளை மதியாத நீர் நாவலரை எப்படி மதிப்பீர்? என்றேன்.

(கிறிஸ்தவர்.) நான் ஒருபோதும் கடவுளுடைய கட்டளையைக் கடக்கவில்லை என்றார்.

(நான்.) கேளும் நுங்கடவுள் ஆதியிலே ஆதாம், ஏவாள் என்னும் இருவரையும் படைத்தார். பின் மிருகங்களையும், விருட்சங்களையும் படைத்தார். அதன்பின் நுங்கடவுள் ஆதாமுக்கும், ஏவாளுக்கும் முன்னே பிரசன்னமாய், ஆதாமே! ஏவாளே! உங்களுக்கு உணவுக்காக இந்த ஏதேன் தோட்டத்திலே எண்ணிறந்த விருட்சங்களைப் படைத்திருக்கிறேன். அவைகளுள்ளே ஒன்றின் கனிகளைமாத்திரம் விலக்கி மற்றை எல்லாவிருட்சங்களின் கனிகளையும் நீவிருண்ணலாம் என்று சொல்லிவிட்டு மறைந்தார். அன்று

தொடங்கி நோவாவின் பிரளயம்வரைக்கும் எல்லாருங் கனிவகைகளையே உண்டுவந்தார்கள். பிரளயத்தின் பின்னே கிறிஸ்தவர்களுள்ளே அநேகர் உயிர்க்கொலைசெய்து மாமிசம்புசித்துவருகின்றார்கள். இது நுமது கடவுளுடைய கட்டளைக்கு விரோதமல்லவா? என்றேன்.

(கிறிஸ்தவர்.) பிரளயத்தின் பின்னர்த் தோன்றிய மோசே என்பவர் இன்ன இன்ன அங்கமுள்ள மிருகங்களையெல்லாம் கொன்று புசிக்கலாமென்று கட்டளைசெய்திருக்கிறார். அக்கட்டளையின்படி கிறிஸ்தவரெல்லாம் மாமிசம்புசிப்பது உமக்குத் தெரியாதா? என்றார்.

(நான்.) கடவுளுடைய கட்டளைக்கு விரோதமான கட்டளையை உண்டாக்குதற்கு மோசே என்பவருக்கு அதிகாரமுண்டோ? அவர் கடவுளுக்கு மேலானவரோ? கேட்டவர் நகையாரோ? என்றேன்.

(கிறிஸ்தவர்.) இந்தப்பூமியிலே ஐசிலாண்டு (Ice Land) என்னும் பெயருடைய ஊரொன்று இருக்கின்றது. அங்கே தானிய வகைகளும் இல்லை! கனிவகைகளும் இல்லை! மிருகங்களும், மீன்களுமே அங்கே உள்ளவைகள் மாமிசங்களை விட்டால் அவர்களுக்கு வேறே உணவில்லை! உணவின்றி அவர்கள் இறந்துபோவது நீதியோ? என்றார்.

யான் இதற்கு விடைசொல்லுமுன்னே சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்த கதிரைவேற்பிள்ளை, "கடவுள் அவ்விடத்திலே மனிதரைப் படைக்கவில்லை. பிறவூரிலே இருந்த சிலர் மாமிசம் புசிக்க விரும்பி அங்கே போய்க் குடியேறியிருக்கலாம்" என்றார். இதுகேட்ட கிறிஸ்தவர் யாதும்பேசாமல் மவுனமாயினர்.

இற்றைக்குச் சிலவருடங்களுக்குமுன் நாலாயிரங்கொப்பி வரையில் அச்சிட்டு இலங்கையிற் பற்பல இடங்களுக்கும் இந்தியா சிங்கப்பூர் பினாங்கு முதலிய பல தேசங்களுக்கும் அனுப்பப்பட்டது. இப்புத்தகத்தை வாசித்தறிந்த இழிகுலத்தவரினும் சிலர் மாமிசபோசனத்தை விட்டுவிட்டார்களென்று கேள்விப்படும்போது யார்தான் சந்தோஷப்படமாட்டார். அப்படியிருக்க உயர்குலத்தவரென்றும், உத்தியோகஸ்தர் என்றும், தனவந்தரென்றும் பிரசித்தி

பெற்றபலர் இந்நூலை வாசித்த பின்னும் புலாலுணவை விலக்காமல்,
கேட்பவர்களுக்கு "நெடுநாட்பயின்றுவந்ததை விலக்கினால் உடம்
புக்கு வேறு சுபவீனத்தையுண்டாக்குவதன்றித் தைரியமுமில்லா
மற் போய்விடு"மென்று சாட்டுச்சொல்லிவிடுகிறார்களே. இதனி
லும் பார்க்க அறியாமையென்ன? யானை குதிரை மாடு முதலிய
வைகள் எதன் மாமிசத்தையுண்டு அவ்வளவு தைரியத்தைக்கொண்
டிருக்கின்றன? தாவரவுணவைத் தனியேயுண்டுசீவிக்கும் அப்
பிராணிகளின் தைரியத்தில் ஆயிரத்திலொருகூறு மாமிசபோசனிக்
குண்டா? ஒரு அரசன் மாமிசபோசனிகளுக்கு உத்தியோகமில்லை
யென்று கட்டளையிட்டால் உலகத்தில் மாமிசபோசனிகளிருப்பா
ர்களா? கடவுளின் வாக்குக்கு மாறாகநடந்து யமபடர்களால் இரும்
புருக்கி வாயிற்பெய எண்ணிறந்தகாலம் நரகிற்கிடந்துவருந்த
முயலுகின்றீர்கள். பெருந் துக்கம்! பெருந் துக்கம்!! உயர்குலத்திற்
பிறந்தும் ஏன் எளியதொழிலால் புலையரினும் கீழாகவேண்டும்.
ஆகா! பரிதாபம்! பரிதாபம்!!

தற்காலம் சிலர் சிவவேடம்பூண்டு, "சிவபெருமானே மானுடச்
சட்டைதாங்கி அடியாரை ஆட்கொள்ள அவதரித்தார்" எனச்
சொல்லி நடித்துக்காட்டி ஆடு மாடு முதலிய பிராணிகளைக் கதறக்
கதறக்கொன்று சமைப்பித்து விலாப்புடைக்கத் தாமுமுண்ணுவ
தன்றி, ஒருபோதும் உண்ணாதவர்களையும் "கண்ணப்பநாயனார்
உண்ணவில்லையா? அவர் அன்பர்களுள் தலைமையானவராயிருக்க
வில்லையா"? என்று வீண்மொழிபேசி உண்பித்தும் நிரயத்துக்கா
ளாகின்றனர். இவர்கள் அறிவிருந்தவாறென்னே! கண்ணப்பநாய
னார் முற்பிறவியில் ஆர் என்பதையும் ஏன் வேடனாய்ப் பிறந்தார்
என்பதையும் இவர்களுணரவில்லைப்போலும் கண்ணப்பநாயனா
ரைப்போலக் கண்ணை இடந்து அப்ப இவர்களும் வல்லரோ.

கொன்றதை மீண்டு உயிர்கொடுத்து எழுப்பக்கூடிய வல்லமை
யுள்ளவர்களே யாகத்திற் கொல்லலாமென்றவிதியிருப்பினும் அதாவு
மடாதசெய்கையென்றே திரிகடுகம் முதலிய நூல்கள் முழங்குகின்
றன. இதுமட்டோ! இறந்தாரை எழுப்பக்கூடிய ஞானியாயிருந்
தாலும் மாமிசபட்சணியாயிருந்தால் சிவபெருமான்மேலாணைப்படி
ஞானியெனச் சொல்லலாகாதெனக் கூறியிருக்கின்றதே.

சீவகாருண்ணியப்பத்து.

மருவானைப் பெண்ணாக்கி ஒருகணத்திற் கண்விழித்து வயங்குமப்பெண்
ணுருவை யாணாக்கி யிறந்தவனை யெழுப்பு மொருவனேனும்
கருவான வுயிர்க்கிரங்கா வுடம்புயிரைக் கடிந்துண்ணுங் கருத்தனானால்
குருவானை யெமதுசிவக் கொழுந்தானை ஞானியெனக் கூறொணாதே.

என்பவற்றானுணர்க.

பொய்சொல்லல்.

கொல்லாமையாகிய புண்ணியத்திற்குப் பின்னிற்கத்தக்க புண்ணியம் பொய்சொல்லாமை என்று வள்ளுவர் கூறுகின்றனர்.

"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று."

நூறு பசுக்களைக் கொன்றால் உத்தமப்பிராமணர் ஒருவரைக் கொன்ற பாவத்திற்குச் சமமாகும். நூறு பிராமணரைக் கொன்றால் ஒரு பெண்ணைக் கொன்ற பாவத்திற்குச் சமமாகும். நூறு பெண்களைக் கொன்றால் ஒரு பாலனைக் கொன்ற பாவத்திற்குச் சமமாகும். நூறு பாலகர்களைக் கொன்றால் ஒரு பொய்சொன்ன பாவத்திற்குச் சமமாகும்.

கோவதைக ளாறுபழி செய்த தொரு வேதம்
வேதியர்க ளாறுபழி செய்த தொரு பேதை
பேதையர்க ளாறுபழி செய்த தொரு பாலன்
பாலகர்க ளாறுபழி செய்த தொரு பொய்யே.

ஒரு பொய் சொல்லுதலினாலே இவ்வளவு பெரும்பாவம் வருமாயின், பலபொய்கள் சொல்லுதலினால் எவ்வளவு பாவம் வருமென்பதை இதுகொண்டுணர்க.

சூதாடுதல்.

சூதாடுதலாலே வருங் கேட்டிற்கு அளவில்லை. தருமபுத்திரர் நாடும் நகருமிழந்து காட்டிற்போக நேர்ந்தது சூதாடுதலால் அல்லவா? "கழகமாடவும் நினைப்பரோ, இதனினுங் கள்ளுணலினிதன்றோ" என்பது முதலிய வாக்குகளைப் பார்க்க.

அடியு மாண்மையும் வலிமையுஞ் சேனையும் அழகும் வென்றியுந் தத்தங்
குடியும் மானமும் பெருமையும் செல்வமும் குலமும் இன்பமுந் தேசும்
படியு மாமறை யொழுக்கமும் புகழும்முன் பயின்ற கல்வியுஞ் சேர
மடியுமான் மதியுணர்ந்தவர் சூதின் மேல் மனம் வைப்பரோ வையாரே.

புகையிலைச்சுருட்டு.

இத்தேசத்திலே பலர் புகையிலைச்சுருட்டுக் குடித்து வருகிறார்கள். உயர்குலத்தவராகிய பிராமணருஞ் சைவரும் ஒருகாலமுஞ் சுருட்டுக் குடிப்பதில்லை. அநேகர் வாயிலே சுருட்டிருத்தலையும் எங்கும் எச்சிற்படுத்துதலையுங் காண்கிறோம். சுருட்டுப்பிடித்தல் அநாசாரம்மாத்திரமோ? நோய்களை வருவித்தற்குங் காரணமாயிருக்கின்றது.

பதார்த்தகுணசிந்தாமணி.

மருந்தை முறித்துவிடும் வாய்வறளச் செய்யும்
திருந்து பெலவீனஞ் சேர்க்கும்—பொருந்துபித்தம்
உண்டாக்கும் விந்தழிக்கும் ஓது புகையிலை
கண்டார்க்கு மாகாது காண்.

கண்புகையும் நெஞ்சுலருங் கைகா லயர்ந்துவிடும்
விண்பெரிய மேனி வெளுத்துவிடும்—திண்புவியில்
ஈரற் கருகிவிடும் இந்திரியம் நட்டமாம்
பாரப் புகையிலையின் பண்பு.

நோயணுகாவிதி.

தற்காலத்திலே அநேகர் ஆசாரமில்லாமல் எவ்வகை உணவுகளையும் உட்கொண்டு தம்முடம்புகளுக்குத் தாமே நோய்களைத் தேடி அவைகளாலே தம் வயசினையுங் குறைக்கின்றார்கள். இற்றைக்கு ஐம்பது வருடங்களுக்கு முன்னே நீரழிவு, பிளவை முதலிய நோய்களாலே வருந்தினோரைக் கண்டிலோம்! கோப்பி, தேயிலை என்ற சொற்களையுங் கேட்டிலோம்! இப்போது பார்த்தால் எல்லாச்சாதியாரும் எவ்வயசினரும் கோப்பி, தேயிலை வேண்டும் என்கிறார்கள். எங்கே பார்த்தாலுங் கோப்பிக்கடையும், தேயிலைக் கடையுங் காணலாம்! காலையிற் கறந்த பசுப்பாலை அர்த்தயாமம் வரைக்கும் வைத்திருந்து கோப்பி தேயிலைகளோடு கலந்து, இனிப்புஞ்சேர்த்து அடிக்கடி குடிக்கிறார்கள். இவைகளாலே நீரழிவு பிளவை முதலிய நோய்கள் சிறுவர் முதலிய யாவரையும் பீடிக்கின்றன. இந்நோய்கள் உண்டாதற்குக் காரணம் யாதென்பதை அவர்கள் அறியவில்லை. அவர்களெல்லாம் அறியும்படி மகான்கள் வாக்கைக்கொண்டு சில விதிகள் சொல்லுகின்றோம். பார்த்துணர்க.

பதார்த்தகுணசிந்தாமணி.

உண்பதிரு போதொழிய மூன்றுபொழு துண்ணோம்
உறங்குவது இராவொழியப் பகலுறக்கஞ் செய்யோம்
மண்பரவு கிழங்குகளிற் கருணையன்றிப் புசியோம்
வாழையிளம் பிஞ்சொழியக் கனியருந்தல் செய்யோம்
பெண்கடமைத் திங்களுக்கோர் தரமன்றி மருவோம்
பெருந்தாக மெடுத்திடினும் பெயர்த்துநீ ரருந்தோம்
நண்புபெற உண்டபின்பு குறுநடையுங் கொள்வோம்
நமனார்க்கிங் கேதுகவை நாமிருக்கு மிடத்தே.

க. உண்ணும்போது அரைவயிற்றுக்கு அன்னமும், கால்வயிற்றுக்கு வெந்நீரும் உண்டு கால்வயிற்றைச் சும்மாவிடுக. பின்னர்ப் பெருந்தாகம் வந்தாலும் நீருண்ணலாகாது.

உ. பசுவின் பாலைக் கறந்தவுடனே குடித்தல்வேண்டும்; காய்ச்சி வேறொன்றிற் கலந்தாவது தனியேயாவது உண்ணவிரும்பினால் கறந்தபின் ஐந்துநாழிகைக்குள்ளே உண்ணுக. அதன்பின் உண்ணுதல் ஆலகாலவிஷத்திற்குச் சமமாகும். பாலுண்ணுதற்குமுன்னும், உண்டபின்னும் ஐந்துநாழிகைக்குள்ளே புளிசேர்ந்த பதார்த்தங்களை உண்ணலாகாது; உண்டாற் பால் வயிற்றிலுறைந்து கேடுசெய்யும். மலம் புசிக்கும் பசுவின் பாலாகாது; அது நோய்களை வருவித்து ஆயுளையுங் குறைக்குமென்று அகத்தியருடைய பதார்த்தகுணசிந்தாமணியிற் சொல்லப்பட்டிருக்கின்றது.

ங. மோரைப் புளிப்புக்கெடத் தண்ணீர் கலந்தும், நெய்யை உருக்கிச் சூட்டுடன் பருப்பில்விட்டும் உண்ணல்வேண்டும். "நீர்கருக்கி மோர் பெருக்கி நெய்யுருக்கி யுண்பவர்தம், பேருரைக்கிற் போமே பிணி."

ச. பசியின்றிப் புசித்தலும், முதனாட்சமைத்த கறியை மறுநாள்வைத்துப் புசித்தலும், காலைவெய்யிற் காய்தலும், மலசலத்தைக் கழிக்காது அடக்குதலும் ஆகாவாம்.

ரு. எண்ணெய் தேய்த்து முழுகும்போது வெந்நீரிலே முழுகுதல் வேண்டும்.

சு. இரவிற் பத்துநாழிகைக்குள்ளே நித்திரைசெய்தல்வேண்டும். நித்திரைசெய்யும்போது இடக்கை கீழாகப்படுத்தல்வேண்டும்.

எ. வருடத்திலே இருமுறை பேதிபண்ணல் வேண்டும்.

அ. சிலர் பல்லு விளக்கும்போது கரி, மண், செங்கல், பாளை, வைக்கோல் முதலியவைகளைக்கொண்டு விளக்குகின்றார்கள். அது மூதேவி வசித்தற்கிடமான பெருங்குற்றம். கருவேல், வேம்பு, புல்லாந்தி, ஆலம்விழுது, நாயுருவி முதலிய சுழிகளாலாவது இலை தூள்களாலாவது விளக்கல்வேண்டும். இவைகொண்டு விளக்கினால் மரணபரியந்தம் பல்லுகள் அசையாமலும் நோயடையாமலும் இருக்கும். அநேகர் பற்கொம்பை வாயில்வைத்துக்கொண்டு நடந்து நடந்து பல் துலக்குகின்றனர். இது மகா தோஷம்.

இன்னும் நோயணுகாமைக்குரியவிதிகளைப் பதார்த்தகுணசிந்தாமணியிலே ஒவ்வொருவரும் பார்த்து நடப்பது நல்லது.

தருமஞ்செய்யும் உபாயவழி.

சிலர், தருமஞ்செய்தற்குத் தம்மிடம் தக்க பொருளில்லை என்று சொல்லுகிறார்கள். யாவருந் தருமஞ்செய்யத்தக்க வழியைக் கேளுங்கள்.

திருமந்திரம்.

யாவர்க்கு மாமிறை வர்க்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாமுண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே.

இன்னும் வறியராயினும் என்ன! செல்வராயினும் என்ன! எல்லாரும் பொருள்கொண்டு தருமஞ்செய்யத்தக்க ஒருவழி சொல்லுகிறோம். ஒவ்வொருவரும் உண்டிக்கும், உடுப்புக்கும், நன்மை தீமை விஷயங்களுக்கும், காணிவாங்குதல், வீடுகட்டுதல் முதலியவைகளுக்குஞ் செலவுசெய்யும் பொருள்களிலே பத்துக்கு ஒருபங்கு கூட்டி நியமித்து அந்த ஒருபங்கையும் எப்போதுந் தவறாமல் எடுத்தெடுத்து ஒருபெட்டியிலிட்டுவைத்து ஒருதொகையாகக் கூடியபின் அதனை எடுத்து இட்டமான தருமங்களைச்செய்யலாம். இது செய்ய யாவராற் கூடாது?

இப்படியே நாட்டுக்கோட்டைச் செட்டிப்பிள்ளைகளும் தங்களுடைய நெல்லு, அரிசிமுதலிய வியாபாரப்பொருள்களெல்லாவற்றிலும் வீதம் நியமித்தெடுத்துப் பெருந்தொகையாக்கி அத்தொகைகொண்டு சேது, ராமேசுரம் முதற் காசிபரியந்தம் அன்னசத்திரங்கட்டி ஆயிரக்கணக்கானபேர்களுக்கு அன்னங் கொடுக்கிறார்கள். அம்மட்டோ! இந்தியாவிலுள்ள பாடல்பெற்ற சிவஸ்தலங்களையெல்லாம் புதுக்கிக் கருங்கல்லாலே திருப்பணிசெய்து வருகிறார்கள். இவர்களிடத்திலே ஈசுரபத்தியும், சிவதருமமும், ஒற்றுமையும் இருக்கின்றன. பொறாமையும், பிறர்பொருள் விரும்புதலும் இல்லை. இவர்கள்போல ஈசுரபத்தி, ஒற்றுமைமுதலியனவுடையராய் யாவரும் பொருளீட்டித் தருமஞ்செய்தல் உத்தமம்.

இனியவைகூறல்.

பிறருக்கு ஒன்றுகொடுத்தல் இயலாதாயினும் இனியசொற்களைச்சொல்லி அவரை மகிழுவித்தலுங் கூடாதோ?

"யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே."

"ஈகை யரிதெனினு மின்சொலினு நல்கூர்தல்
ஓகோ கொடிது கொடிதம்மா."

என்னும் பெரியோர்வாக்குகளை நோக்குக. உத்தமதானங்களாகிய இன்சொல், தண்ணீர், அன்னம் என்னும் மூன்றனுள்ளே எந்தச் சாதியாராற் கொடுக்கப்படினுந் தள்ளாமற் கொள்ளப்படுவது இன்சொல்லேயாம். முகங்கடுத்துப் பின்னர் வேண்டியது கொடுத்தலினும் இன்சொற்கூறி மகிழ்வித்தல் நல்லது.

"முகமது கடுத்துப்பின் வேணது கொடுப்பினும்
மொழியுகல் வசனம் நன்று"

அகங்காரம், கோபம், வன்சொல் என்னும் மூன்றும் சகோதரமாய்நின்று எவரையுங்கெடுக்கும் பெரும்பகைகளாகும். அகங்காரத்தினை நீக்கினாற் பிறப்பையுங் கடக்கலாகும்.

"எழுபிறப்பாழி கடப்பதற்குபாயம் யானெனுமகந்தையைமாற்றல்"

கோபமே பாவங்களுக்குக் காரணம்.

"கோபமேபாவங்களுக்கெலாந்தாய்தந்தை
கோபமேகுடிகெடுக்கும்"

வன்சொல்லோ தீயினுங் கொடியது.

"தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்டவடு"

ஒருவரை ஒருவர் அடித்துக் காயப்படுத்துதற்கும், வெட்டிக் கொல்லுவதற்கும், வழக்குப்பேசிப் பணஞ் செலவுசெய்தற்கும், மற்றுந் தீச்செயல்களுக்கும் இவை மூன்றுமே காரணமாகின்றன.

இந்த மூன்றையும் வேரோடுகளைதற்குத் தக்க ஆயுதம் இன்சொற்கூறுதலாகும். ஆயுதங்கொண்டு கொல்லும்படி வருவோனையும் இன்சொல்லானது ஆயுதத்தைக்கைவிட்டு வணங்கிநிற்கச் செய்யும். இன்சொற்கூறல் முதலியன அறிவாளராகிய உத்தமருக்குரிய குணங்களாகும்.

வள்ளலார்.

சத்தியமும் நோன்புந் தவமும் இனஞ்சொல்லும்
உத்தமருக் குள்ளகுணம் ஒன்றின்றி—மத்திமராய்
மைதுனமுஞ் சோறுமாய் மாயுமன வும்புசிக்குங்
கைதவர்க்கும் உண்டோ கதி.

கொல்லாமை.

உலகினி லுயர்ந்தோ ருரைத்தபா வங்களுட்
கொலையெனும் பாவம் கொடிது கொடிது
கோவென் றலறக் கொடுமனத் தோடும்
உயிரை வதைத்தல் ஊனப் பழக்கம்
உயிரு முடலுஞ் சேர்ந்த புதுமை
உரைக்கநீ யுணராய் உன்னைப் போலவே
மற்றுள உயிருந் தின்று குடித்து
இன்ப துன்ப மீசனாற் பெற்றுக்
காலமுற்றிக் கழிதல் வேண்டும்
உயிரையு முடலையும் ஒன்ற தாகக்
கூட்டிய பிரானே குலைத்தலும் வேண்டும்
அன்றியுங் கேளாய் அரிய மகனே
உலகினி லுயிர்கள் உடலுடன் கூடிப்
பலபல விதமாய்ப் பிறந்திறந் துழலும்
மனுடர் தேவர் மிருகம் பறவை
ஊர்ந்து திரியும் பூச்சியும் புழுவும்
நீரில் வாழும் நெடிய மீன்களும்
நண்டு மிறாலும் நாதனார் அருளால்
தாவர முதலாச் சாற்றிட நின்றன
ஓரறி வோடும் ஈரறி வோடும்
மூன்று நாலு முற்றி ஐந்தாய்
எறி எறி எற்ற மாக
அப்பனே வளரும் அன்புடன் கேளாய்
உற்றுநீ பார்க்கில் உலகினி லுயிர்கள்
எல்லா மொன்றே ஊமர்கள் உணரார்
வேறு பிரித்து வெறுமொழி பிதற்றி
நரக வாயில் நமக்கென நிற்பார்
மாவும் பலாவுந் தெங்கும் தேக்கும்
ஆலு மரசும் வேறு வேறு
வர்க்க மாக வளர்ந்த வேனும்
சாதியொன் றாகிச் சாரு மன்றோ
மரமென யாரும் மதித்திடு வார்காண்

வித்தில் முளைத்து வெளியே தழைத்து
இலையுந் தளிரும் எறிந்து வளர்ந்து
மரமென நிற்கும் மாற்ற மொன்றே
ஊணும் உறக்கமும் இன்பமுந் துன்பமும்
உயிர்களுக் கெல்லாம் உள்ளன வாமே
நாமு முயிரில் நாடில் ஒன்றே
நாத னவனே ஆவன் யார்க்கும்
ஆக்கவும் அழிக்கவும் அவனே தாதா
உன்றன் உடம்பில் ஒருவர் அடித்தாற்
கதறிப் பதறிக் கன்றுதன் தாயைத்
தேடு மாபோற் றிகைப்புட னின்று
வீட்டுக் கோடி விளைந்ததை யுரைப்பாய்
உன்றன் மேனியிற் றுன்பமே வியதால்
உன்னை அன்பாய் அன்னை பார்ப்பாள்
அதுவே போல வொவ்வோ ருயிரும்
கன்றுங் குட்டியுங் குஞ்சுங் குழந்தையும்
ஆக வளர்ந்து தமக்குந் தாய்க்கும்
அன்பு கூடி அருகினி லோடும்
இவற்றுள் ஒன்றை இன்னற் படுத்தினால்
இறைவனு நோவான் உயிரும் பதைக்கும்
உனக்குந் துன்பம் உடனே கூடும்
பிறர்க்குத் துன்பம் பண்ணுவ தாலே
பீடையும் நோயும் பிறவியும் வறுமையும்
உன்னிழல் போல உன்னைத் தொடரும்
பிறவித் துன்பம் பெரிதோ சிறிதோ
ஆடும் மாடும் ஆன உயிர்கள்
கோழியும் மீனும் வாய்விடாச் சாதி
வாழ்த்தினும் சரியே தாழ்த்தினுஞ் சரியே
அடிக்கினுங் குறைக்கினும் ஆரிடம் பேசும்
அவைக்குத் துன்பம் ஆக்கிடு மவனே
தனக்குத் துன்பந் தானே தேடுவன்
எந்த உயிரும் இறைவன் கோவில்
தடிகொண் டடித்தல் தலையை அறுத்தல்
குத்துதல் மிதித்தல் கொடுரஞ் செய்தல்
கொலையொடு சேர்ந்த தொலையாப் பாவம்
மன்னுயி ரெல்லாம் உன்னுயிர் போலவே
மனத்திற் கொண்டு மாதவ னடியை
மறவா திருப்பாய் அறமிது வேகாண்
இராச குமார னிரதமேற் செல்லச்

சில்லிற் கன்று சிக்கி இறந்தது
பசுத்தான் கதறிப் பதைபதைப் போடும்
பாலன் றாதையைப் பார்த்தே யோடி
மாளிகை வாசல் மணியை அடிக்க
அறநீதி வழுவா அரசன் றானும்
காரிய மறிந்து கன்றினைக் கொன்ற
காதன் மைந்தனைத் தேரின் காலிற்
கீழே கிடத்தித் தேரினை யூர்ந்தான்
கன்றை யிழந்த கறவை போல
மைந்தனை யிழந்து மன்னன் பதைத்தான்
ஆயினு முயிரை அழித்த லாலே
சேயினும் பெரிதாய்ச் செங்கோல் செலுத்தினான்
மனுநீதி கண்ட மாச்சோழன் என்று
உலகம் புகழ உமையாள் பாகன்
திருவருள் புரியச் சிறந்துயிர் பெற்றுக்
கன்றுங் குமரனுங் கடிதி லெழுந்தார்
இறைவன் செயல்தான் இப்படி ஆக
எவ்வுயிர்க் காயினும் ஔவையார் சொற்படி
அறஞ்செய விரும்புமின் மறஞ்செயா தொழிமின்
அறமெனப் படுத லுயிர்க்கிதம் புரிதல்
கொலையி னோடு கொடிதெனப் புகலும்
புலையெனும் புன்மை கூடியே நிற்கும்
புலாலினை யுண்டான் புலைய னாவான்
ஊனை விரும்பி யுயிரைக் கொல்லும்
பாதக ரோடு பழகினும் பாவம்
மீனு மிறைச்சியுந் தேனுங் கற்கண்டுமோ
காலந் தப்பிற் கரைந்து நாறும்
புழுத்து நெளியும் புன்புலால் அப்பா
இத்தை இவர்கள் இனிதென வேண்டிக்
கழுகு கூகை காகநாய் நரிபோற்
பிணத்தைத் தின்று மணத்தை யுவந்து
உடம்பை வளர்த்து உலகின் றாரே
வியாதியோ வென்றால் விட்டிடா துன்னை
உடம்பு தளரவும் உண்ணின்று வருத்தித்
தீரா நோய்களாற் றீமையே விளையும்
ஆயுங் குன்றும் அப்பா கேளாய்
காயுங் கனியுஞ் சுத்த போசனம்
சுத்த தாதுவுஞ் சுத்தமே யாகும்
அன்புந் தயையும் அணைந்து நிற்கும்
மிருகத் தன்மை ஒருவிப் போகும்
கோபமுங் கொடூரமுங் காமமு மணுகா
பொறையுந் தவமும் பொருந்தி வளரும்
"புலையுங் கொலையுங் களவுந் தவிர்"க
கொல்லா விரத மெல்லார்க்கு நன்றே.

சோதிடப்பிரகாசயந்திரசாலை, கோக்குவில், யாழ்ப்பாணம்.

தபாற்செலவு வேறே.	ரூ. அ.
ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு	2- 4
தமிழ் இருவசம்பிரசப்புத்துரை ...	2- 0
தருக்கசங்கிரகம், நியாயபோதினி, பதகிருத்தியம், அன்னம்பட்டீயம், நீலகண்டீயம்	2- 0
தமிழ்ப்புலவர்சரித்திரம்	2- 0
தத்துவப்பிரகாசவுரை	1-12
திருப்புகழ்த்திரட்டு (அரும்பதவுரையுடன்)	1- 4
திருவாதவூரர்புராணவுரை, (திருவெம்பாவையுடன்) ...	1- 0
விதானமாலையுரை (சோதிடம்)...	1- 4
சரசோதிமாலை ,, ...	1- 0
சந்தானதீபிகையுரை ,, ...	0- 8
செகராசசேகரமாலை ,, ...	0- 4
[illegible]ிதம் உரையுடன் ,, ...	0- 4
சிவஞானசித்தியார் சுபக்கம் மூலமுமுரையும் 1-ம் சஞ்சிகை...	0-10
டெ. 2-ம் சஞ்சிகை...	0- 8
உரிச்சொனிகண்டு 12-தொகுதி உரையுடன்	0- 6
நீதிநெறிவிளக்கப்புத்துரை ...	0- 6
கந்தரலங்காரவுரை(புதியபதிப்பு)	0- 6
[illegible]மலைக்குறவஞ்சி நாடகம் ...	0- 5
[illegible]காரியம்	0- 5
நீதிவெண்பாவுரை	0- 4
சூடாமணிநிகண்டு க-வது (பதங்களின் பொருள்களோடு) ...	0- 4
சூடாமணிநிகண்டு உ-வது (பதங்களின் பொருள்களோடு) ...	0- 5

தபாற்செலவு வேறே.	ரூ. அ.
ஆத்திசூடிவெண்பா(கதையுடன்)	0- 4
இலக்கணசந்திரிகை (அரியவிதி)	0- 4
சிவத்தோத்திரக்கவித்திரட்டு(தேவாரம்முதலியன அடங்கியது)	0- 3
கிள்ளைவிடுதூது	0- 2
சிறுத்தொண்டர்கதை	0- 2
சதாசாரக் கவித்திரட்டு	0- 2
மறைசையந்தாதி அரும்பதவுரை	0- 2
சாணக்கியநீதிவெண்பா	0- 2
சிராத்தவிதி	0- 2
சிவாலயதரிசனவிதி	0-1½
தோத்திரத்திரட்டு	0-2,,
சிவாலயதரிசனவிதியும், தோத்திரத்திரட்டும் ஒரேபுத்தகமாக ...	0-3,,
ஆத்திசூடி, கொன்றைவேந்தன் உரையுடன்	0-1¼
வாக்குண்டாம் உரையுடன் ...	0-1¼
நல்வழி உரையுடன்	0-1,,
நன்னெறி உரையுடன்	0-1,,
டைமூன்றும் ஒரேபுத்தகமாக ...	0- 3
மூப்பிணியைச்சங்கரிக்கும் சஞ்சீவி	0- 2
மாமிசபோசனஞ்செய்வோருக்கு இராமபாணம்	0- 1
நவக்கிரக கவசம்	0- 1
சனிதுதி	0- 1
கனவுநூல் (உரையுடன்)	0- 1
அமாவாசைத் தருப்பணவிதி ...	0- 1
நடராசப்பத்து, நடராசபஜனைக் கீர்த்தனை	0- 1
சம்ஸ்கிருத முதற்புத்தகம்... ...	0- 2

பிறர்பதிப்புப் புத்தகங்கள்.

கந்தபுராணம், மகேந்திரகாண்டம் பதவுரையுடன்	2- 0
இராமாயணம், பாலகாண்டம் (அரும்பதவுரை)	2- 0
சிவப்பிரகாசப்புத்துரை	1-10
பிரபஞ்சவிசாரம்	1- 8
ஸ்ரீ. தக்ஷிணகைலாசபுராணம் ...	1- 4
அகப்பொருள்விளக்கவுரை ...	1- 4
இலக்கியச்சொல்லகராதி	1- 4
சங்கராச்சாரியம் ஆயுட்பாவகம்...	1- 0
,, யோகபாவகம்...	1- 0
,, களத்திரபாவகம்	1- 0
,, பிதுர்பாவகம்...	0-12
,, மாதுர்பாவகம்	0-12
,, புத்திரபாவகம்	0-12
,, சகோதரபாவகம்	0- 8

ஜாதகசந்திரிகை மூலமுமுரையும்	0- 8
தமிழ்நாவலர்சரிதை	0-12
சிசுபாலசரிதம்	0- 8
வினைப்பகுபதவிளக்கம்	0- 8
இதோபதேசம்	0- 8
நியாஸார்ச்சனதம்பம் (அர்ச்சனநாமங்கள், சம்ஸ்கிருதம்) ...	0- 8
மேகதூதக் காரிகை	0- 4
ஆறுமுகநாவலர் அவர்கள் சரித்திரச்சுருக்கமும், தனிப்பாமாலையும் படத்துடன், சி. செல்லையாபிள்ளை தொகுத்தது ...	0- 8
Swami Vivekananda's Visit to Ceylon, with a Photo of the Swami...	0- 4
நல்லூர்ப்பஞ்சரத்தினம்	0- 1